SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**TERMENAL EXAM - 1**
**TAMIL (II LANG)**

**Class: 6** **Max Marks: 80**
**Date: 24.9.19** **Time: 3 hrs**

**பகுதி – அ (படித்தல்)**

**1. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

விரினான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, 'சுத்தம் சோறு போடும்' என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல் ஆரோக்கியமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

**வினாக்கள்**

i. பழமொழியின் சிறப்பு ______________ சொல்வது.
அ) விரிவாகச் ஆ) சுருங்கச்
இ) பழைமையைச் ஈ) பல மொழிகளில்

ii. நோயற்ற வாழ்வைத் தருவது ______________.
அ) உழைப்பு ஆ) உணவு
இ) சுத்தம் ஈ) பணம்

iii. உடல் ஆரோக்கியமே ___________ அடிப்படை.
அ) வாழ்க்கைக்கு ஆ) உழைப்புக்கு
இ) பொருளுக்கு ஈ) மகிழ்ச்சிக்கு

iv. உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன _________.
அ) உணவு, உடை, உறைவிடம் ஆ) உணவு, உடை, செல்வம்
இ) ஆரோக்கியம் ஈ) இன்பம், செல்வம்

v. பத்தியில் உள்ள பழமொழி _________
அ) கந்தையானாலும் கசக்கிக் கட்டு
ஆ) சுத்தம் சோறு போடும்
இ) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
ஈ) சுத்தம் சுகம் தரும்

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (5)**

சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித் திரும்புவதற்கு அந்தப்பூவில் உள்ள ‘போட்டோட் ரோபிஸம்’ என்ற இயக்கம் தான் காரணம். இந்த இயக்கத்திற்குச் சூரியனின் ஒளிக்கதிர் மிகவும் அவசியம். இதனால் இந்தப்பூ கிழக்கு, மேற்கு திசையைக் காட்டக் கூடியதாக உள்ளது. இதேபோல ‘சில்பியம் லேசினியேட்டம்’ என்ற செடியும் திசைகாட்டும் வேலை செய்கிறது. இந்தச்செடி வட ஆப்பிரிக்கா நாட்டில் வளர்கிறது. ஆறு அடி உயரம் வரை இந்தச் செடி வளரும். தண்டுப்பகுதியில் கீழே அதிக இலைகளும் மேலே செல்லச்செல்ல இலைகள் குறைந்து கொண்டும் வரும். இலைகள் மொரமொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும். அவை வடக்கும் தெற்குமாகவே எப்போதும் இருக்கும். திசைகாட்டும் கருவியில் உள்ள காந்தமுள் வடக்கும் தெற்குமாக நின்று திசை காட்டுவதுபோல இந்த இலையும் காட்டுவதால் இந்தச் செடிக்கு காம்பஸ் என்ற பெயரும் உண்டு.

**வினாக்கள்**

i. சூரியகாந்திப்பூ சூரியனை நோக்கித்திரும்பக் காரணமாக இருப்பது எது?
அ) காந்த இயக்கம் ஆ) இயற்கை நியதி
இ) போட்டோட்ரோபிஸம் ஈ) நிலத்தின் தன்மை

ii. சில்பியம் லேசினியேட்டம் என்ற செடி எந்த நாட்டில் காணப்படுகிறது?
அ) இந்தியா ஆ) அமெரிக்கா
இ) தென்னாப்பிரிக்கா ஈ) வடாஆப்பிரிக்கா

iii. சில்பியம் லேசினியேட்டம் செடி எவ்வளவு உயரம் வளரும்?
அ) மூன்றடி ஆ) ஆறடி இ) ஐந்தடி ஈ) இரண்டடி

iv. சில்பியம் லேசினியேட்டம் செடியின் இலைகளின் தன்மை யாது?
அ) மொரமொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும்
ஆ) தடித்திருக்கும்
இ) பசுமையும் மென்மையுமாக இருக்கும்
ஈ) முள்ளுடன் விளங்கும்

v. சில்பியம் லேசினியேட்டம் செடிக்குரிய வேறு பெயர் யாது?
அ) சூரியகாந்திச் செடி ஆ) போட்டோட்ரோபிஸம்
இ) காம்பஸ் செடி ஈ) நச்சுச் செடி

**3. மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக (5)**

இன்றைய சூழலில் வாழ்வில் மட்டுமல்லாமல் வேளாண்மையில் கூடச் செயற்கையின் மீது ஆர்வம் மிகுந்து விட்டது. நல்ல விளைச்சல் எடுக்கலாம் என்று நினைத்துத் தேவைக்கு மேல் செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளைப் பயன் படுத்தியதனால் மண்ணின் தன்மையும், நீரின் தன்மையும் கெட்டு, நிலம், நீர், காற்று, ஆகாயம் முதலிய வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்களுக்கு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கும் புதிதுபுதிதாக நோய்கள் வருகின்றன. இச்சூழ்நிலை மாற இயற்கை வேளாண்மையை நம் மக்கள் பின்பற்ற வேண்டும். இயற்கை வேளாண்மை எனப்படும் அங்கக வேளாண்மை ஆறு கூறுகளைக் கொண்டது. இலை தழைகள், ஆடு மாடுகளின் எரு, பிண்ணாக்குகள் என பல இயற்கை உரங்கள் உள்ளன. இவற்றைத் தொழு உரங்கள் என்பர். பசுவிடமிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள் அதாவது கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்து பொருட்களைக் கலந்து செய்வது பஞ்சகவ்வியம். தொழு உரங்கள், பஞ்சகவ்வியம் போன்றவற்றைப் பயன்படுத்தி இயற்கை முறையில் வேளாண்மை செய்து பயன் பெறலாம்.

## பகுதி – ஆ (எழுதுதல்)

**4.** நீ வாழும் பகுதியில் உள்ள மக்களுக்கு குடி நீர் வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக. (**6)**

**(அல்லது)**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உனது நண்பனைப் பாராட்டி ஒரு மடல் எழுதுக.

**கடிதங்களில் உனது பெயரும், முகவரியும்:** க.வளவன் / க.வான்மதி, 12- வள்ளலார் தெரு, திருமூலர் காலனி, மதுரை.

**5. பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. (8)**

i. முன்னுரை – சுற்றுச் சூழல் – காற்று, நீர், நிலம், ஒலி மாசுபடுதல் – பாதிப்புகள் – தடுக்கும் முறைகள் -- மரம் வளர்த்தலின் தேவை – முடிவுரை.

ii. முன்னுரை –வாழ்வாதாரம் செல்வம் – செல்வத்தின் சிறப்பு – சிக்கனம் – சேமிப்பு – சீரான வாழ்வு– முடிவுரை.

iii. முன்னுரை – மழை நீர் – வீணடிப்பு – விளைவுகள் – மழை நீர் சேகரித்தல் - வழிகள் முடிவுரை.

## பகுதி இ (இலக்கணம்)

**6. சான்று தருக. (3)**

i. ஒரு மாத்திரை
அ) குறில் ஆ) நெடில் இ) மெய் ஈ) ஆய்தம்

ii. சார்பெழுத்து
அ) உயிர் ஆ) மெய் இ) நெடில் ஈ) உயிர்மெய்

iii. மொழி முதல் எழுத்து
அ) ஞா ஆ) ஃ இ) ங ஈ) டு

**7. நிரப்புக. (3)**

i. மொழியை எவ்வாறு பேசவும், எழுதவும் வேண்டும் என வரையறுப்பது _______
அ) இலக்கணம் ஆ) இலக்கியம்
இ) செய்யுள் ஈ) உரைநடை

ii. சார்பெழுத்துகள் __________ வகைப்படும்.
அ) எட்டு ஆ) பத்து இ) ஆறு ஈ) நூறு

iii. வல்லினத்தின் இன எழுத்துகள் ____________.
அ) இடையினம் ஆ) மெய்யெழுத்து
இ) மெல்லினம் ஈ) ஆய்தம்

**8. கூறியவாறு செய்க. (3)**

i. மடம் (நெடிலாக்குக)
அ) மாடம் ஆ) மிடம் இ) குடம் ஈ) தடம்

ii. ஐ (இன எழுத்தை எழுதுக)
அ) உ ஆ) எ இ) இ ஈ) ஒ

iii. எண்ணம் (மாத்திரை காண்க)
அ) 8 ஆ) 2 ½ இ) 4 ஈ) 3

**9. இலக்கணகுறிப்பு தருக. (3)**

i. மொழிமுதல் எழுத்து
அ) பை ஆ) ரா இ) ப் ஈ) ஃ

ii. நெடில் எழுத்துகள்

அ) க்,ச்,ட்,த்,ப்,ற் ஆ) அ,இ,உ,எ,ஒ

இ) ஆ,ஈ,ஊ,ஏ.ஐ,ஓ,ஔ ஈ) ய்,ர்,ல்,வ்,ழ்,ல்

iii. சார்பெழுத்து

அ) ஐ ஆ) க் இ) ஔ ஈ) கா

**10. சரியான சொற்றொடரை தேர்ந்தெடுத்து எழுதுக. (3)**

i. தமிழ் இலக்கணம் பத்து வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஆறு வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.
தமிழ் இலக்கணம் ஏழு வகைப்படும்.

ii. மெய் எழுத்துகள் மொழிக்கு முதலில் வரும்.
மெய் எழுத்துகள் மொழிக்கு முதலில் வராது.
மெய் எழுத்துகள் மொழிக்கு இடையில் வராது.
மெய் எழுத்துகள் மொழிக்கு கடையில் வராது.

iii. எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு நீளம் எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு சொல் எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு மாத்திரை எனப்படும்.
எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு அளபெடை எனப்படும்.

## பகுதி ஈ (இலக்கியம்)

**11. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. (5)**

தமிழ் வளமைமிக்க மொழி. தொல்காப்பியம், நன்னூல் உள்ளிட்ட இலக்கண நூல்கள் மிகுந்தது தமிழ் மொழி. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்க இலக்கியங்களைக் கொண்டது; திருக்குறள், நாலடியார் முதலிய அற நூல்கள் பலவும் நிறைந்தது; சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களைக் கொண்டது. இவ்வாறு இலக்கிய இலக்கண வளம் நிறைந்தது தமிழ் மொழி.

**வினாக்கள்**

i. இலக்கிய இலக்கண வளம் நிறைந்த மொழி எது?
ii. சங்க இலக்கியங்கள் எவை?

iii. திருக்குறள், நாலடியார் போன்றவை எவ்வகை நூல்கள்?
iv. பத்தியில் உள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
v. பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

**12. பின்வரும் பாடலைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக. (4)**

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையான் – மன்னற்குத்
தந்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**வினாக்கள்**

i. இப்பாடல் இடம் பெற்ற நூல் ____________.
அ) திருக்குறள் ஆ) மூதுரை
இ) இன்பத்தமிழ் ஈ) நாலடியார்

ii. பாடலின் ஆசிரியர் யார்?
அ) ஔவையார் ஆ) அதியமான்
இ) திருவள்ளுவர் ஈ) கபிலர்

iii. மாசற – பிரித்து எழுதுக.
அ) மாச+அற ஆ) மாசு+அற
இ) மாச+உற ஈ) மாசு+உற

iv. யாருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு?
அ) கற்றோர்க்கு ஆ) கல்லாதவர்க்கு
இ) மன்னனுக்கு ஈ) செல்வந்தருக்கு

**13. விடுபட்ட சீர்களை எழுதுக. 2**

i. அகர முதல எழுத்தெல்லாம் ________
பகவன் _____________ உலகு.

ii. இனிய _________ இன்னாத கூறல்
______________ காய்கவர்ந் தற்று

**14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. 8**

i. விளைவுக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?
ii. காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?
iii. எவற்றுக்குப் புதிய கண்டுபிடிப்புகள் தேவை என்பது குறித்து எழுதுக.
iv. அறிவியல் ஆத்திச்சூடி பாடலின் கருத்தை எழுதுக.

**15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடை தருக.10**

i. தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகள் எழுதுக.
ii. சிட்டுக் குருவியின் வாழ்க்கைப் பற்றி குறிப்பு எழுதுக.
iii. எந்திர மனிதனின் பயன்களை விளக்குக.
iv. காமராாசரின் கல்விப்பணி குறித்து எழுதுக.

**16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. 7**

i. கிழவனும் கடலும் கதையை எழுதுக.
ii. ஒளி பிறந்தது என்னும் தலைப்பில் கலாமின் கருத்துகளை எழுதுக.